Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 16, 2024 | இதழ் 276

# இதுவரை ரூ.1,284 கோடி பணம், பொருட்கள் பறிமுதல் தமிழகத்தில் நாளை மாலை 6 மணியுடன் பிரச்சாரம் ஓய்கிறது

# வாக்காளர் அல்லாதோர் தொகுதியிலிருந்து வெளியேற வேண்டும் ஊர்வலம், பொதுக்கூட்டத்திற்கு தடை; மீறினால் 2 ஆண்டு சிறை



சென்னை, 16 ஏப்ரல் 2024: தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலை 6 மணியுடன் ஓய்கிறது.

நாடாளுமன்ற தேர்தல் தமிழகத்தில் வரும் 19 ந்தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது முதலே, தமிழகத்தில் அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி, அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணி, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்காக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் கட்சியினருக்கு இணையாக சுயேட்சை வேட்பாளர்களும் விதவிதமாக பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் ஸ்டாலின் தமிழகம் முழுவதும் சென்று ஆதரவு திரட்டினார். அவரது மகனும் அமைச்சருமான உதயநிதி மற்றும் கூட்டணி தலைவர்களும் தீவிர பிரச்சாரம் செய்தனர்.

அண்ணா தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்தார். அண்ணா தி.மு.க. கூட்டணியில் உள்ள தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்தும் தீவிர பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டினார்.

இதுவரை இல்லாத அளவுக்கு பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு 8 முறை வந்து பிரச்சாரம் மேற்கொண்டார். தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்பே அவர் தமிழகத்தில் பிரச்சாரத்தை துவக்கினார். நேற்று 8வது முறையாக அவர் அம்பாசமுத்திரத்தில் பிரச்சாரம் செய்தார். மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத்சிங், நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. தேசிய தலைவர் நட்டா, பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர்.

சீமானின் நாம் தமிழர் கட்சி 39 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகிறது. அவர் தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

ராகுல்காந்தி பலமுறை தமிழகம் வந்து தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். கமல்ஹாசன் கட்சியான மக்கள் நீதி மையம் தேர்தலில் போட்டியிடவில்லை. தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கமல்ஹாசன் பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டினார்.

அரசியல் கட்சியினர் வெயிலையும் பொருட்படுத்தாமல் வீதி, வீதியாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், திரும்பிய பக்கமெல்லாம் வேட்பாளர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் காணப்பட்டனர்.

கருணாநிதி, எம்.ஜி.ஆர். போல வேடம் அணிந்தும் ஆங்காங்கே தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வேட்பாளர்கள் வராத பகுதிகளில் வாக்காளர்களை கவரும் வகையில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கும் பணியில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேள தாளங்கள் முழங்க சினிமா பாடல்கள், அரசியல் கட்சி பாடல்கள் மூலம் ஆடல்-பாடல் நிகழ்ச்சி, சைக்கிள், இருசக்கர வாகனங்களில் கட்சி சின்னங்களை வைத்து கொண்டு பல்வேறு பகுதிகளில் பிரச்சாரம் என கடந்த 15 நாட்களாக திருவிழா போல களைக்கட்டியிருந்த தேர்தல் பிரச்சாரம் நாளையுடன் நிறைவடைகிறது.

தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும், விளவங்கோடு சட்டசபை தொகுதியிலும் வரும் 19ந்தேதி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. எனவே தேர்தல் பிரச்சாரம் நாளை மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. அதன்பிறகு அமைதி பிரச்சாரம் உள்பட எந்த வகையான பிரச்சாரத்துக்கும் அனுமதி இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்தபின் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை இன்று தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாளை மாலை 6 மணியுடன் பிரச்சாரம் முடிவடைகிறது. பிரச்சாரம் நிறைவடைந்த பின், தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டம், ஊர்வலம் நடத்த கூடாது. தொலைக்காட்சி, ரேடியோ, சமூக வலைதளங்களில் பிரச்சாரம் செய்யக்கூடாது. இதனை மீறினால் 2 ஆண்டு சிறை, அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் அல்லாதவர்கள் நாளை மாலை 6 மணிக்கு மேல் தொகுதியிலிருந்து வெளியேற வேண்டும். தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் உள்ளிட்ட இடங்களிலும் வெளியாட்கள் யாரும் தங்க கூடாது. பிரச்சார வாகன அனுமதிகள் நாளை மாலை 6 மணியுடன் முடிந்துவிடும்.

தமிழகத்தில் இதுவரை ரூ.1,284 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் ரொக்கமாக மட்டும் ரூ.162.47 கோடியும், வருமான வரித்துறையால் ரூ.83.63 கோடியும், பறக்கும் படையால் ரூ.78.84 கோடியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

'தேர்தல் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது சி-விஜில் எனும் செயலியில் புகார் அளிக்கலாம். அந்த செயலியில் இதுவரை 4,169 புகா□□கள் வந்தன. அவற்றில் 3,350 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன. 383 புகார்களுக்கு போதிய ஆதாரம் இல்லாததால் கைவிடப்பட்டன. மீதமுள்ள 34 புகார்கள் மட்டுமே தீர்க்கப்படாமல் உள்ளன.

வாக்காளர்கள் ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால், 1950 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். இந்த எண்ணுக்கு முன்னதாக மாவட்டத்துக்கான 'எஸ்டிடி' தொலைபேசி எண்ணைப் பதிவிட்டு அழைக்க வேண்டும். வாக்குப்பதிவு அன்று ஏதாவது தனியார் நிறுவனம் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கவில்லை என்றாலும் புகார் அளிக்கலாம்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான 1 லட்சத்து 59 ஆயிரத்து 100 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், 82,014 கட்டுப்பாட்டு கருவிகளும், 88,783 விவிபேட் (வாக்கு ஒப்புகைச் சீட்டு இயந்திரம்) இயந்திரங்கள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன.

குறைவான எண்ணிக்கையில் அரசு அலுவலர்கள் உள்ள மாவட்டங்களில், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் 2 அலுவலர்களை மட்டும் பணி அமர்த்த தேர்தல் கமிஷன் சிறப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

அந்த வகையில் செங்கல்பட்டு மாவட்டத்திலும், விளவங்கோடு சட்டசபை தொகுதி இடைத்தேர்தல் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள வாக்குச்சாவடிகளில் ஒரு தலைமை அலுவலர் மற்றும் 2 அலுவலர்கள் பணியில் இருப்பார்கள். கூடுதல் எண்ணிக்கையில் அரசு ஊழியர்கள் இருக்கும் மற்ற மாவட்டங்களில் கூடுதலாக ஒரு அலுவலர் பணியாற்றுவார்.

எம்.எல்.ஏ. மரணம் காரணமாக விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி காலியாக உள்ளது என்ற அறிவிப்பு, தேர்தல் கமிஷனுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டுவிட்டது. அங்கு ஜூன் 4ந்தேதிக்கு முன்பாக இடைத்தேர்தல் நடத்த முடியுமா? என்றால், தேர்தல் கமிஷன்தான் அதில் முடிவெடுக்கும். ஒருவேளை விக்கிரவாண்டி தொகுதிக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டாலும், அதை எதிர்கொள்ள தேவையான வாக்கு எந்திரங்கள் தயாராக உள்ளன. நாங்கள் எல்லாவற்றுக்கும் தயாராகவே இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கொளத்தூரில் பிரச்சாரத்துக்கு இடையே கால்பந்தாடிய முதல்வர் ஸ்டாலின்



சென்னை, 16 ஏப்ரல் 2024: கொளத்தூர், ஐ.சி.எப். பகுதிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

மு.க.ஸ்டாலின் வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர் கலாநிதி வீராசாமி மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளர் தயாநிதிமாறன் ஆகியோருக்கு வீதி வீதியாக திறந்த ஜீப்பில் சென்று வாக்கு சேகரித்தார். முதல்வர் ஸ்டாலின் வாக்கு சேகரித்து சென்ற இடங்களில் எல்லாம் மகளிர் பெருமளவில் கூடி நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஸ்டாலின், அங்குள்ள விளையாட்டுத் திடலுக்குச் சென்று அங்கு பயிற்சி செய்துகொண்டிருந்த கால்பந்து விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்துகள் கூறி அவர்களுக்கு மேலும் வசதிகள் ஏதும் தேவைப்படுகிறதா என்று அக்கறையுடன் கேட்டார். அங்கிருந்த கால்பந்து வீரர்களுடன் ஸ்டாலின் கால்பந்து விளையாடி மகிழ்ந்தார்.

கொளத்தூர் தொகுதியில் வீடு வீடாகச் சென்று தி.மு.க.வுக்கு வாக்கு சேகரித்தார். முதல்வரின் வருகைக்காக அந்தப் பகுதி மக்கள், வீட்டு வாசலில் வண்ணக் கோலமிட்டு, தோரணங்கள் கட்டி, ஆர்வத்தோடு திரண்டு நின்று இசை வாத்தியங்களோடு வரவேற்றனர்.

வழிநெடுகிலும் முகமலர்ச்சியோடு கையசைத்து முதலமைச்சருக்கு பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர். புதுமைப்பெண் திட்டத்தால் பயனடைந்து வரும் மாணவிகள் முதலமைச்சரிடம் நேரில் நன்றி தெரிவித்தார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சுட்டிக்காட்டி இல்லத்தரசிகளும் முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர். கொளத்தூரில் வீதி, வீதியாகச் செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மேளதாளத்துடன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட முதல்வரிடம் தன் குழந்தைக்கு பெயர் சூட்டுமாறு கோரிய பெண்ணின் குழந்தைக்கு 'மரகதம்' என பெயர் சூட்டினார். நடனக் கலைஞர்கள், சிறுமியரின் நடன நிகழ்ச்சிகள், மேளதாளம் என கொளத்தூர் விழாக்கோலம் பூண்டது.

# நயினார் நாகேந்திரனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

சென்னை, 16 ஏப்ரல் 2024: சென்னை எழும்பூரில் இருந்து கடந்த 6ம் தேதி புறப்பட்ட நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.4 கோடி பணம் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. பணத்தை கொண்டுசென்ற 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், நெல்லை பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் பணம் என்றும் வாக்காளர்களுக்கு கொடுக்கத்தான் பணத்தை எடுத்து சென்றதாகவும் வாக்குமூலம் அளித்தனர். இந்த பணத்துக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நயினார் நாகேந்திரன் கூறியிருந்தார். இதையடுத்து நேரில் வந்து ஆஜராகி இது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று நெல்லை பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு தாம்பரம் போலீசார் சம்மன் அனுப்பினர்.

இதனை தொடர்ந்து, நயினார் நாகேந்திரனின் பணம்தான் என முதற்கட்ட தகவல் வெளியானது. இதையடுத்து, நயினார் நாகேந்திரன் போட்டியிடும் நெல்லை தொகுதிக்கு தேர்தல் நடத்த தடை விதிக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது.

இது தொடர்பாக மதுரையை சேர்ந்த ஒருவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், 'வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவான வழக்கை மறைத்து நயினார் நாகேந்திரன் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். அதனால், அவரின் வேட்புமனுவை நிராகரிக்க கோரிய தன் ஆட்சேபனை மீது முடிவெடுக்கும் வரை தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் நயினார் நாகேந்திரனின் வேட்புமனுவை ஏற்றது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும்' என்று கூறப்பட்டிருந்தது. இந்த மனு மீதான விசாரணை இன்று நடைபெறும் என சென்னை ஐகோர்ட் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபூர்வாலா, நீதிபதி ஜெ.சத்திய நாராயணா பிரசாத் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது வாக்குப்பதிவு தவிர மற்ற அனைத்து தேர்தல் நடவடிக்கைகள் முடிந்த நிலையில் தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். அதேசமயம் இந்த வழக்கில் மனுதாரர் பாதிக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிந்த பின் தேர்தல் வழக்காக மனு தாக்கல் செய்யலாம் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

# தங்கம் விலை ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை நெருங்கியது

சென்னை, 16 ஏப்ரல் 2024: தங்கம் விலை இன்று ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை நெருங்கியது.

தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. நேற்று சவரனுக்கு ரூ.520 குறைந்து ரூ.54 ஆயிரத்து 320க்கு விற்பனையானது. இந்த நிலையில் இன்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது.

சென்னையில் இன்று காலை ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.640 அதிகரித்து ரூ.54 ஆயிரத்து 960-க்கு விற்றது. ஒரு கிராம் தங்கம் ரூ.6 ஆயிரத்து 870 ஆக உள்ளது. ஒரு பவுன் ரூ.55 ஆயிரத்தை நெருங்கி இருக்கிறது.

தங்கத்தைப் போலவே வெள்ளி விலையும் உயர்ந்து வருகிறது. இன்று வெள்ளி கிலோவுக்கு ரூ.1000 அதிகரித்து ரூ.90,500 ஆக உள்ளது. ஒரு கிராம் வெள்ளி ரூ.90.50க்கு விற்கிறது.

# பிரேமலதா விஜயகாந்த் வாகனத்தில் பறக்கும்படை அதிகாரிகள் சோதனை

சென்னை, 16 ஏப்ரல் 2024: பிரேமலதா விஜயகாந்த் வாகனத்தில் தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 2 நாட்களே இருப்பதால் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர். அரசியல் கட்சியினரும், வாக்கு சேகரிப்பில் மும்முரம் காட்டி வருகின்றனர். அதன்படி விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் விஜயபிரபாகரனை ஆதரித்து அவரது தாயாரும், கட்சியின் பொதுச்செயலாளருமான பிரேமலதா விஜயகாந்த் நேற்று வாக்கு சேகரித்தார்.

தொகுதிக்கு உட்பட்ட அவனியாபுரம், கைத்தறி நகர், திருப்பரங்குன்றம் உள்ளிட்ட பகுதிகளில் பிரசாரம் மேற்கொள்வதற்காக விருதுநகரில் இருந்து காரில் புறப்பட்டு வந்தார்.

மதுரை விமான நிலையம் மண்டேலா நகர் பகுதியில் வரும்போது அவரது காரை பறக்கும் படை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனை நடத்த வேண்டும் என கூறினர்.

இதையடுத்து பிரேமலதா விஜயகாந்த் காரில் இருந்து இறங்கினார். அதன் பின், பறக்கும்படை அதிகாரிகள் கார் முழுவதும் தீவிர சோதனை நடத்தினர். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை. இதனை தொடர்ந்து பிரேமலதா விஜயகாந்த் காரில் புறப்பட்டு சென்றார்.

# மைத்ரீ, காரட்லேன் உடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி அம்சங்களுடன் கூடிய வேலைவாய்ப்புத் திட்டத்தைத் தொடங்க இணைந்து செயல்படவுள்ளது!




சென்னை, 16 ஏப்ரல் 2024: அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்களுக்கு (பிடபிள்யூஐடிடிஎஸ்) வாழ்க்கையை அவர்களாக முன்னெடுக்க அதிகாரம் அளிப்பதில் செயல்பட்டு வரும் முன்னோடித்துவமிக்க நிறுவனமான மைத்ரீ, காரட்லேன் உடன் இணைந்து, தன்னுடைய முதல் 'உதவி வேலைவாய்ப்புத் திட்டத்தை' இன்று அறிமுகப்படுத்தியுள்ளது . உத்திரவாதமுள்ள வருவாய் மற்றும் செயல்பாட்டுத்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்களுக்கு [பிடபிள்யூஐடிடி] வாழ்வாதாரப் பாதுகாப்பை வழங்குவதையும், இது போல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வாய்ப்பளிப்பதையும் இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. டாடா சன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு.பாஸ்கர் பட் மற்றும் காரட்லேன் நிறுவனர் திரு.மிதுன் சசெட்டி ஆகியோர் முறையே தலைமை விருந்தினராகவும், கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மைத்ரீ, அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர் [பிடபிள்யூஐடிடி]-களின் நல்வாழ்வு என்ற உன்னத நோக்கத்திற்காக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், இது போன்றவர்களுக்கு சாதகமான பணிச்சூழலில் அவர்களின் வெளிகாட்டியிராத அபார திறனை அங்கீகரித்து வருவதில் அக்கறை காட்டி வருகிறது. இந்திய அரசாங்கத்தின் எம் ஜி என் ஆர் ஈ ஜி ஏ கொள்கையால் ஈர்க்கப்பட்டு அது முன்னெடுத்து வரும் மைத்ரீ, அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்களுக்கு வாழ்வாதார பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன், அவர்களது செயல்பாட்டுத்திறன் அடிப்படையில் உத்தரவாதமான வருவாய் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்கும் ஒரு பிரத்தியேகமான திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.

அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்கள் மத்தியில் வாழ்வாதரத்திற்கு உதவும் வகையில் அவர்களது தொடர்ச்சியான பங்களிப்பு, யாரையும் சார்ந்திராமல் தங்களையே நம்பி செயல்பட வைக்கும் தன்னம்பிக்கை மற்றும் அவர்களாகவே வாழ்க்கையை முன்னெடுக்க அதிகாரமளித்தல் ஆகியவற்றை எல்லோருக்கும் எளிதில் கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். ஒரு கட்டமைக்கப்பட்ட இரண்டு வருட பயிற்சித் திட்டத்தின் மூலம், இதில் பங்கேற்பவர்கள் பணி கலாச்சாரத்திற்குத் தயாராக இருக்கவும், அவர்களது பணிகளுக்கு இத்திட்டத்தின் கீழ், தகுதியுடைய அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்கள், ஐந்தாண்டுகளுக்கு உத்தரவாதமான மாதாந்திர ஊதியமாக ரூ. 2500 மற்றும் அவர்களின் செயல்பாட்டுத்திறனை அடிப்படையில் வழங்கப்படும் ஊக்கத்தொகையைப் பெறுவார்கள். பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த செயல்பாடு மற்றும் பன்முகத்தன்மை கொண்ட சமூக நல செயல்பாடுகள் மீது கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், 100 இளைய தலைமுறையினரை கொண்ட இந்த முன்முயற்சியின் முதல் குழுவிற்கு காரட்லேன் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது. இந்த கூட்டு செயல்பாடு, ஒவ்வொரு தனிமனிதனும் வாழ்க்கையில் நம்பிக்கையுடன் வாழ வாய்ப்புள்ள, மேலும் அனைத்து பிரிவு மக்களையும் உள்ளடக்கிய ஒரு ஊக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடுத்தக்கட்ட நகர்வை குறிப்பதாக அமைந்திருக்கிறது. திறமை வாய்ந்த இளைய தலைமுறையினரை வழக்கமான பணியாளர்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், காரட்லேன் மற்றும் மைத்ரீ அர்த்தமுள்ள ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கி இருக்கின்றன. மேலும், இம்முயற்சி இயற்கையிலேயே குறைப்பாடுகள் உள்ளவர்களை முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பாகுபாடில்லாமல் அனைவரையும் அரவணைக்கும் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

டாடா சன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. பாஸ்கர் பட் இந்த முன்முயற்சியைப் பற்றி கூறுகையில், "அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை நோக்கிய பாதையை ஒளிரச்செய்யும் வகையில் அமைந்திருக்கும் மைத்ரீயின் இந்த அர்த்தமுள்ள முன்முயற்சியின் ஒரு அங்கமாக நாங்கள் இருப்பதை ஒரு பெரும் பாக்கியமாக நினைக்கிறோம். குறைப்பாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், நாங்கள் அவர்களது வாழ்க்கையை வளப்படுத்துவதோடு மட்டுமில்லாமல் நம்முடைய சமூகத்தின் கட்டமைப்பையும் வலுப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

மைத்ரீ அறிவுசார் மற்றும் உடல் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள தனிநபர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், அவர்களின் நிதிச் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பில் நேர்மறையான நீண்டகால தாக்கத்தை உருவாக்கி வருகிறது.

# புழல் பகுதியில் பீர் பாட்டிலால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட சரித்திர பதிவேடு குற்றவாளி உட்பட 3 நபர்கள் கைது




சென்னை, 16 ஏப்ரல் 2024: சென்னை, புழல், புத்தகரம், சூரப்பட்டு ரோடு, மதுரா மேட்டூரில் வசித்து வரும் துர்கேஷ், வ/23, த/பெ.ஹேமசந்திரன் என்பவர் அவரது நண்பர் தினேஷ் என்பவருடன் 14.04.2024 அன்று இரவு, புழல், விநாயகபுரம், புத்தகரம் திருமாள் நகர் பிரதான சாலையில் சாமிநாதன் என்பவர் பேச வேண்டும் அழைத்ததால், சென்றனர். அப்பொழுது, தினேஷுக்கும், சாமிநாதனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டபோது, துர்கேஷ் அவர்களை தடுத்துள்ளார். உடனே, சாமிநாதன் மற்றும் அவருடன் வந்திருந்த நண்பர்கள் அஸ்வின்குமார், எபினேசர் ஆகியோர் துர்கேஷை கைகளால் மற்றும் பீர் பாட்டிலால் தாக்கிவிட்டு மூவரும் தப்பிச் சென்றனர். இரத்தக்காயமடைந்த துர்கேஷ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகாரின்பேரில், எம்-3 புழல் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எம்-3 புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சாமிநாதன், வ/25, த/பெ.மாயவன், லஷ்மிநகர் 1வது தெரு, திருமலை நகர் விரிவு, புத்தகரம், சென்னை, 2.அஸ்வின்குமார், வ/25, த/பெ.முருகேசன் காந்தி தெரு, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மேட்டுக்குப்பம், கோயம்பேடு 3.எபினேசர், வ/25, த/பெ.டென்சில், விக்னேஸ்வரா நகர், மதுரா மாதங்குப்பம், புத்தகரம் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். விசாரணையில், தினேஷ்குமாருக்கும், எதிரி சாமிநாதனுக்கும் பெண்ணை காதலிப்பது தொடர்பாக முன்விரோதம் இருந்துள்ள நிலையில், சாமிநாதன் பேச வேண்டும் என அழைத்ததால், தினேஷ்குமார் அவரது நண்பர் துர்கேஷை அழைத்துச் சென்றது தெரியவந்தது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட அஸ்வின்குமார் எம்-3 புழல் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 1 கொலை, 1 கொலை முயற்சி உட்பட பல குற்ற வழக்குகள் உள்ளதும், தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 3 நபர்களும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (15.04.2024) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# நடிகர் மோகன் நடிக்கும் ‘ஹரா’ பட டீசர் பிரம்மாண்ட வெளியீடு!

## ஆக்ஸிடெண்ட் ஆன போது சீட் பெல்ட் போட்டதால்தான் இன்று உங்கள் முன் இருக்கிறேன் - விஜய் ஸ்ரீ ஜி

## நிகில் தான் விஜய் ஸ்ரீயை கூட்டி வந்தார், எனக்கு திரைக்கதையில் சில தயக்கங்கள் இருந்தது, அதை மனமுவந்து மாற்றினார்

## இந்தப்படம் எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் - ஸ்வாதி ‘ஹரா’ உங்களுக்கு புது அனுபவமாக இருக்கும் - ரஷாந்த் ஆர்வின்

## இந்தப்படத்திற்கு விளம்பரம் எதுவும் தேவை இல்லை, மோகன் சார் ஒருவரே போதும் - சிங்கம் புலி




சென்னை, 16 ஏப்ரல் 2024: தமிழ் திரையுலகில் அதிக எண்ணிகையில் வெள்ளிவிழா படங்கள் தந்த, நடிகர் மோகன் நீண்ட இடைவேளைக்குப் பிறகு, மீண்டும் நாயகனாக களமிறங்கும் திரைப்படம் 'ஹரா'. கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் இப்படத்தை இணைந்து தயாரித்துள்ளனர். மாறுபட்ட களத்தில், ஆக்ஷன் அதிரடிப் படமாக இப்படத்தை இயக்கியுள்ளார் விஜய் ஸ்ரீ ஜி. விரைவில் திரைக்கு வரவுள்ள நிலையில் இப்படத்தின் டீசர் நேற்று வெளியிடப்பட்டு பத்திரிகையாளர் சந்திப்பு படக்குழுவினர் கலந்துகொள்ள நடைபெற்றது.

இந்நிகழ்வில்...

தயாரிப்பாளர் எஸ் பி மோகன் ராஜ் பேசியதாவதுஞ்

பத்திரிகை நண்பர்கள் மற்றும் திரைத்துறை நண்பர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகள். இப்படம் நாங்கள் தயாரிக்கும் இரண்டாவது படம், முதல் படம் 'பவுடர்'. இப்படம் முழுக்க முழுக்க கோயம்புத்தூரில் படமாக்கப்பட்டுள்ளது. மோகன் சாருக்கு அங்கு மிகப்பெரிய வரவேற்பு. படம் நன்றாக வந்துள்ளது. மோகன் சிறப்பாக நடித்துள்ளார். படத்திற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள், நன்றி.

நடிகை ஸ்வாதி பேசியதாவதுஞ்

நான் கேரளாவைச் சேர்ந்தவள். இந்தப்படம் எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் தான். வாய்ப்பு தந்த இயக்குநருக்கு நன்றி. எல்லோருமே ஜாலியா எனக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள். மோகன் சார் ரொம்ப அழகாக சொல்லித் தருவார். அவர் நடிப்பு, பாடல்கள் எல்லாமே எனக்கு மிகவும் பிடிக்கும். இப்படம் மிக அட்டகாசமாக வந்துள்ளது. படத்திற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள் நன்றி.

இசையமைப்பாளர் ரஷாந்த் ஆர்வின் பேசியதாவதுஞ்

இந்தப்படம் மிகப்பெரிய வாய்ப்பு. மோகன் சாரை எத்தனையோ படங்களில் ரசித்திருக்கிறோம், அவரது படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பை நன்றாக செய்துள்ளேன் என நினைக்கிறேன். இந்த வாய்ப்பு தந்த இயக்குநருக்கு நன்றி. மோகன் சார் அற்புதமாக நடித்துள்ளார். 'ஹரா' உங்களுக்கு புது அனுபவமாக இருக்கும். படத்திற்கு ஆதரவு தாருங்கள், நன்றி.

நடிகை அனித்ரா பேசியதாவதுஞ்

இந்தப்படத்தில் நானும் இருப்பது மகிழ்ச்சி. மோகன் சாருடன் கூடவே இருப்பது மாதிரியான கேரக்டர். அவருடன் நடித்தது மகிழ்ச்சியான அனுபவம், அவர் பாடல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் கூட நடிப்பேன் என நினைக்கவில்லை. இந்த வாய்ப்பு தந்த இயக்குநர் சாருக்கு நன்றி. இயக்குநரின் பவுடர் படத்திலும் நடித்துள்ளேன், இந்தப்படம் சூப்பராக வந்துள்ளது. ஆதரவு தாருங்கள் நன்றி.

நடிகர் ஜெயக்குமார் பேசியதாவதுஞ்

மோகன் சார் ரசிகன் நான், அவர் கூட நடிக்க கிடைத்த வாய்ப்பு எனக்கு பெருமை. இயக்குநர் மிக ஜாலியாக, எல்லோரிடமும் இயல்பாக பழகி, படத்தை எடுத்தார். டீசர் சூப்பராக வந்துள்ளது. இசை அட்டகாசமாக உள்ளது. படத்திற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள், நன்றி.

நடிகர் ஆதவன் பேசியதாவதுஞ்

சின்ன வயதிலிருந்து எனக்கு இன்ஸ்பிரேஷன் மோகன் சார் தான். என் அம்மா அவர் பாடல்களுக்கு மிகப்பெரிய ஃபேன். அப்படி வியந்து பார்த்த நடிகரை, விஜய் ஸ்ரீ சார் ஆக்ஷன் ஹீரோவாக காட்டியுள்ளார். மோகன் சார் இப்படத்தில் செம்மையாக ஆக்ஷன் செய்துள்ளார். படம் அட்டகாசமாக வந்துள்ளது. இன்னும் இதுமாதிரி நிறையப் படங்கள் மோகன் சார் செய்ய வேண்டும். மோகன் சாரை வைத்து தயாரிப்பாளர் தொடர்ந்து படம் எடுப்பார், இயக்குநரும் தொடர்ந்து இயக்குவார் என நம்புகிறேன், நன்றி.

நடிகர் சிங்கம் புலி பேசியதாவதுஞ்

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள். இந்நாளில் ஒரு விழாவில் பங்கு கொண்டது மகிழ்ச்சி. இந்தப்பட வாய்ப்பு, நமஸ்காரம் சரவணன் எனும் நண்பரால் வந்தது அதுவும் பவுடர் படத்தில் தான் முதலில் வாய்ப்பு வந்தது. ஷூட்டிங் ஸ்பாட் போனால் இயக்குநர் மூன்று கேமரா வைத்து காட்சிகளை எடுப்பார், வித்தியாசமாக இருக்கும். அது தான் அவர் திறமை. இயக்குநர் மிகப்பெரிய ஆக்சிடெண்டை தாண்டி வந்திருக்கிறார். ஹரா மாதிரி இன்னும் நிறைய படங்கள் அவர் எடுக்க வேண்டும். நல்ல உழைப்பாளி, டீசர் பார்த்தேன் அதிலேயே 43 ஷாட் இருக்கிறது, பார்க்க அட்டகாசமாக இருக்கிறது. வாழ்த்துகள். அனுமோல் உடன் அயலி செய்தேன் இங்கு அவரிடம் பேசலாம் என நினைத்தேன், ஆனால் டிரெய்லரில் ஒரு உதை விடுகிறார் அதைப் பார்த்தவுடனே அப்படியே வீட்டுக்குப் போய்விடலாம் என முடிவு செய்துவிட்டேன். இந்தப்படம் ஷூட்டிங்கில் தினமும் நிறையக் கூட்டம் இருக்கும், பட்ஜெட் பெரிதாகுமே எனக் கேட்டால், மோகன் சார் படம் நிறைய எதிர்பார்ப்பு இருக்கிறது என்பார் இயக்குநர். இப்போதெல்லாம் ஒரு படத்தை விளம்பரப்படுத்த ஏதேதோ செய்கிறார்கள், ஆனால் இந்தப்படத்திற்கு அது எதுவும் தேவை இல்லை, மோகன் சார் ஒருவரே போதும். அவர் 5 படம் தான் மைக் பிடித்து நடித்தேன் என்கிறார் ஆனால் அது ஒவ்வொன்றும் 5 வருடம் ஓடியிருக்கிறதே! இன்றும் எங்கும் அவர் பாடல்கள் தான். அவர் எத்தனையோ பேரை வாழவைத்துள்ளார். இசையை யாரும் மறக்க முடியாது, அது போல் மோகன் சாரை யாரும் மறக்க முடியாது. தயாரிப்பாளர் அனைவரையும் அத்தனை ஆதரவுடன் பார்த்துக் கொண்டார், அடுத்த படத்தில் என்னை மறக்க மாட்டார் என நம்புகிறேன். படம் வெற்றி பெற வாழ்த்துகள் என்றென்றும் எங்களை வாழவைக்கும் அனைவருக்கும் நன்றி.

நாயகி அனுமோல் பேசியதாவதுஞ்

தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள், எனக்கு நீங்கள் தந்து வரும் ஆதரவிற்கு நன்றி. இந்த வாய்ப்பு தந்த விஜய் □□ரீ சாருக்கு நன்றி. நான் மோகன் சார் ஆக்டிங் பார்த்து தான் நடிக்க கற்றேன். அவர் பாடல்கள் எல்லாம் எனக்கு அவ்வளவு பிடிக்கும். எல்லாப் படத்திற்கும் கதை கேட்டால் தான் எக்ஸைட் ஆவார்கள், ஆனால் இந்தப்படத்தில் மோகன் சார் நடிக்கிறார் என்றவுடனே நான் எக்ஸைட் ஆகிவிட்டேன். அவருடன் நடித்தது மறக்க முடியாத அனுபவம். படத்தில் அசத்தியுள்ளார். உங்கள் எல்லோருக்கும் பிடிக்கும். இயக்குநர் மிகக் கடினமாக உழைத்துள்ளார். ஆக்சிடெண்ட்டில் அவர் உடம்பில் 12 பிளேட் வைத்திருக்கிறார்கள், ஆனாலும் எப்போதும் படம், படம் என்றே இருப்பார். அவர் மனதிற்கு கடவுள் பெரிய வெற்றியைத் தருவார். எப்போதும் தமிழில் எனக்கு ஆதரவு தந்து வருகிறீர்கள், இப்படத்திற்கும் அதே ஆதரவைத் தருவீர்கள் என நம்புகிறேன், நன்றி.

இயக்குநர் விஜய் ஸ்ரீ ஜி பேசியதாவது...

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள். இந்த மேடை ஏறி நிற்பேன் என நினைத்து பார்க்கவில்லை. காரில் போகும் போது ஒரு ஆக்ஸிடெண்ட், மூன்று நாள் கழித்து தான் எனக்கு நினைவே வந்தது. மோகன் சார் குடும்பத்தோடு என்னைப் பார்க்க வந்துவிட்டார். எல்லோருக்கும் குடும்பம் தான் முக்கியம். 16 லட்சம் செலவானது. மோகன் சார், மோகன் ராஜ் சார் தான் பார்த்துக் கொண்டார்கள். மோகன் சார் மிகப்பெரிய ஆளுமை, ஆனால் ஒரு துளி கர்வம் கூட அவரிடம் இருக்காது. இந்தப்படத்திற்காக பேசும்போது, அவருக்கு என்ன மார்க்கெட் இருக்கிறது, அவரை வைத்து ஏன் படமெடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள், ஆனால் கோயம்புத்தூரில் ஷூட் செய்யும்போது எங்கு போனாலும் 500 பேர் அவரைப் பார்க்க கூடி விடுவார்கள். அவர் வந்தால் தெரியும் அவர் மார்க்கெட் என்னவென்று. எல்லாவற்றையும் கடந்து அவரின் மனிதம் என்னை பிரமிக்க வைத்தது. அவர் தான் என்னை உயிர்ப்பித்தார். நாம் பல இடங்களில் சீட் பெல்ட் போடுவதில்லை, கவனம் இல்லாமல் இருக்கிறோம், அதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். மோகன் சார் நடிப்பில் கலக்கியுள்ளார். ஒவ்வொரு காட்சியிலும் அசத்தியுள்ளார். அவருக்கு இந்த 'ஹரா' மிகப்பெரிய வெற்றிப்படமாக இருக்கும், நன்றி.

நடிகர் மோகன் பேசியதாவதுஞ்

எல்லோருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள். எத்தனையோ படம் நடித்திருக்கலாம், ஆனால் நான் பெருமையாக சொல்லிக்கொள்கிறேன், நான் நடித்த படங்கள் எல்லாம் லிஸ்ட் வைத்துக் கொண்டதே இல்லை. 'ஹரா' தான் என் முதல் படம். நான் நடிக்க ஆரம்பித்த போது, எனக்கு என மார்க்கெட் வாய்ப்பு வந்த பிறகு, எப்போதும் என்னால் முடிந்த அளவு புதுமுக இயக்குநர்களுக்கு வாய்ப்பு தந்துள்ளேன். அவர்களுக்கு வாய்ப்பு தந்தால் பசியோடு வெறியோடு படம் செய்வார்கள் என்று தான் நினைத்துள்ளேன். என்னுடைய பாட்டுகள் பற்றி எல்லோரும் சொல்கிறார்கள் ஆனால் அதற்கு காரணம் இசைஞானி, அவர் யாருக்கும் வஞ்சனை இல்லாமல் பாட்டு தந்துள்ளார். எல்லா நடிகர்களுக்கும் ஒரே மாதிரி பாடல் தந்துள்ளார். ஆனால் அந்தப் பாடல்களில் என்னை ரசிக்கிறார்கள் என்றால் அதை ஆர் சுந்தர்ராஜன் மாதிரி இயக்குநர்கள் இயக்கியது தான் காரணம். அவர்கள் மக்கள் உணர்ந்து ஃபீல் செய்வது மாதிரி படம் எடுத்து வெற்றிப்பெறச் செய்தார்கள். அதனால் தான் மக்கள் என்னை தங்கள் பிள்ளை போல் கொண்டாடினார்கள். என்னை வைத்து இயக்கிய இயக்குநர்கள், இசையமைப்பாளர் எல்லோரும் தான் என் வெற்றிக்கு காரணம். நான் எப்போதும் மார்க்கெட்டைப் பற்றி யோசிக்கவே மாட்டேன், ஒரு படம் என்றால் அது எனக்குப் பிடிக்க வேண்டும் அவ்வளவு தான். நிகில் தான் விஜய் ஸ்ரீயை கூட்டி வந்தார், எனக்கு திரைக்கதையில் சில தயக்கங்கள் இருந்தது, அதை மனமுவந்து மாற்றினார். 7 முறை மாற்றி தான் இந்தப்படத்தை எடுத்துள்ளோம். ஏன் ஹரா வை ஒத்துக்கொண்டீர்கள் என எல்லோரும் கேட்டார்கள். விஜய் ஸ்ரீயிடம் ஒரு ஃபெண்டாஸ்டிக்கான லைட் அண்ட் சவுண்ட் சென்ஸ் இருக்கிறது, அந்த திறமை அவரை பெரிய அளவிற்கு கொண்டு செல்லும். விஜய் ஸ்ரீ அவருக்கு என்ன ஆனாலும், படத்தை பற்றி மட்டுமே யோசித்துக்கொண்டு இருப்பார். அவர் பிழைத்து வரக் காரணம் அவர் மனைவி, குழந்தைகள் புண்ணியம் தான். அவர் இன்னும் நிறைய நல்ல படங்கள் தருவார். இந்தப்படத்தில் முதலில் பாடல்கள் இல்லை ஆனால் மூன்று பாடல்கள் வைத்துவிட்டார், மூன்று பாடல்களையும் அவரே எழுதியுள்ளார். மணிவண்ணன் மாதிரியான அறிவு கொண்டவர், மணிவண்ணன் தான் பேப்பரில் கதை இல்லாமல் எடுப்பார். ராஜிவ் மேனன் சாரை கேமராமேனாக பார்த்திருக்கிறேன் அவருடன் இணைந்து நடித்துள்ளேன். சிங்கம்புலி, அனுமோல் முதலாக இணைந்து நடித்த அனைவருக்கும் என் நன்றிகள். படம் பாருங்கள் உங்களுக்கு பிடித்திருந்தால் ஆதரவு தாருங்கள், நன்றி.

'ஹரா' திரைப்படத்தை கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் தயாரித்துள்ளார்கள்.

'ஹரா' திரைப்படத்தில் யோகி பாபு, சாருஹாசன், சுரேஷ் மேனன், வனிதா விஜயகுமார், மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாம்ஸ் மற்றும் சந்தோஷ் பிரபாகர் உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் நடித்துள்ளனர். இசை: ரஷாந்த் அர்வின், ஒளிப்பதிவு: பிரகத் முனியசாமி, படத்தொகுப்பு: குணா.

## ஃபிளிப்கார்ட் பயண சலுகைகளில் அதன் தடத்தை விரிவுபடுத்துகிறது; அதன் செயலியில் பேருந்து முன்பதிவுகளை தொடங்குகிறது

கோயம்புத்தூர், 16 ஏப்ரல் 2024: இந்தியாவின் உள்நாட்டு டிஜிட்டல் வர்த்தக சுற்றுச்சூழல் அமைப்பான ஃபிளிப்கார்ட் அதன் செயலியில் பேருந்து சேவைகளை தொடங்குவதாக அறிவித்துள்ளது. பல மாநில போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து, இந்தியா முழுவதும் 25,000+ வழித்தடங்களுக்கான இணைப்புடன் 10 லட்சம் பேருந்து இணைப்புகளைத் தேர்ந்தெடுக்கும் விருப்பத்தை வாடிக்கையாளர்களுக்கு ஃபிளிப்கார்ட் வழங்கும். பிளிப்கார்ட் டிராவல் பேனரின் கீழ் கிடைக்கும் விமானம் மற்றும் ஹோட்டல் முன்பதிவு சேவைகளுக்கு இது ஒரு கூடுதலான சலுகையாகும்.

இந்த அறிமுகமானது, இந்த பிரிவில் உருவாகி வரும் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பிளிப்கார்ட்டின் திட்டத்தை நோக்கிய ஒரு படியாகும். ஃபிளிப்கார்ட் இன் தற்போதைய வாடிக்கையாளர் தளத்திற்கும் பொதுவாக பேருந்து பயணிகளுக்கும் இடையே உள்ள அபரிமிதமான ஒருங்கிணைப்புடன், மலிவு பயணத்தை செயல்படுத்துவதற்கான நிறுவனத்தின் முன்மொழிவு போட்டி நிலப்பரப்பில் ஒரு மாற்றமாக இருக்கும். பேருந்து முன்பதிவுகளுக்கான சூப்பர் காயின்களை மீட்டெடுப்பது என்பது புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஃபிளிப்கார்ட் இல் கிடைக்கும் தனித்துவமான மதிப்பு கூட்டப்பட்ட அம்சமாகும்.

ஃபிளிப்கார்ட் இல் பேருந்து முன்பதிவு சேவையின் முக்கிய அம்சங்களில் சிறந்த சலுகைகளுக்கான அணுகல், வசதிக்கான கட்டணங்கள் அல்லது மறைக்கப்பட்ட கட்டணங்கள் இல்லை, ரூ. 50 வரை சூப்பர் காயின்களை மீட்டெடுப்பதன் மூலம் சலுகைகள் மற்றும் 24/7 குரல் ஹெல்ப்லைன் ஆகியவை அடங்கும். அறிமுகச் சலுகையின் ஒரு பகுதியாக, வாடிக்கையாளர்கள் 15 ஏப்ரல் 2024 வரை ஒவ்வொரு பேருந்து முன்பதிவுக்கும் சூப்பர்காயின்ஸ் மீது 5 % கூடுதல் தள்ளுபடியுடன் 15% தள்ளுபடியையும் அனுபவிக்க முடியும்.

இந்த புதிய வளர்ச்சி குறித்து ஃபிளிப்கார்ட்டின் மூத்த துணைத் தலைவர் அஜய் வீர் யாதவ் பேசுகையில், "பிளிப்கார்ட்டின் பரந்த சேவைகளில் பேருந்துகளின் சேர்க்கையானது, பயணம் உட்பட அனைத்து நுகர்வோர் தேவைகளுக்கான இறுதி இலக்காக மாறுவதற்கான எங்கள் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. அடுக்கு-2 மற்றும் அடுக்கு-3 சந்தைகளில் ஃபிளிப்கார்ட் இன் வலுவான இருப்புடன், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நகரங்களுக்கு இடையேயான பயணத் தேவைகளுக்கு வசதியான மற்றும் நம்பகமான தீர்வை வழங்க இந்த நடவடிக்கை எங்களுக்கு உதவுகிறது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்புடன், எதிர்காலத்தில் அவர்களின் பயண அனுபவங்களை எளிதாக்கும் வகையில், மதிப்பு கூட்டப்பட்ட வசதிகளுடன் தொடர்ந்து சேவை செய்வோம்.

ஃபிளிப்கார்ட் விமானங்கள் மற்றும் ஹோட்டல்கள் 2019 இல் தொடங்கப்பட்டதில் இருந்து சீராக வளர்ந்து வருகின்றன. ஒட்டுமொத்த தொழில் மட்டத்தில் பயணத்திற்கான மிகவும் நேர்மறையான கண்ணோட்டத்துடன், ஃபிளிப்கார்ட் குழு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை தொடர்ந்து வழங்கும்.

## முன்னுரிமை பங்குகள் வெளியீடு வழியாக ரூ.4860 மில்லியன் மூலதனத்தை திரட்டும் ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்

சென்னை, 16 ஏப்ரல் 2024: பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (ஈ பி சி) ஒப்பந்த சேவைகள் துறையில் முன்னணி நிறுவனமான ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட், முழுமையாக மாற்றத்தக்க வாரண்டுகளை ஒரு வாரண்டிற்கு ரூ. 300 என்ற வெளியீட்டு விலையில் முன்னுரிமை வெளியீடு வழிமுறையின் மூலம் ரூ.4860 மில்லியன் என்ற நிதியை திரட்டுவதற்கு அதன் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த வெளியீடானது, வெளியீட்டு நடவடிக்கை, அவசியமான நிறுவன உறுப்பினர்களது ஒப்புதல் மற்றும் அதிகாரப்பூர்வ அமைப்புகளின் அனுமதிக்கு உட்பட்டது. முன்மொழியப்படும் முன்னுரிமை வாரண்ட்டுகளை பெறுபவர்களில் எஃப் ஐ ஐ-கள் மற்றும் இந்நிறுவனத்தின் புரமோட்டர்கள் அல்லாத குழுவிலிருந்து பிற முதலீட்டாளர்களும் இடம்பெறுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் இந்த மூலதன நிதி திரட்டலுக்கான ஒரு குழுவை அமைப்பதற்கும் இதன் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு செயற்பிரிவின் முன்னணியில் ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் உள்ளது. உயர்தர மற்றும் நம்பகமான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (ஈ பி சி) ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்கான ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி வளர்ச்சிகாண செய்திருப்பதன் மூலம் இதை அது சாதித்திருக்கிறது. தேசத்தின் கட்டமைப்பு செயல்பாட்டில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இத்தொழில்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் நிறுவனமாக மிக விரைவாக எச் எம் பி எல் உருவெடுத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகத்திற்கான (எம் எஸ் ஆர் டி சி) முன்னணி திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதன் மூலம், குறிப்பிடத்தக்க மைல்கற்களை எச் எம் பி எல் அதன் வளர்ச்சி பயணத்தில் எட்டியுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், கோவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், 2019 ஆம் ஆண்டில் வாக்கன் - பாலி நெடுஞ்சாலை திட்டம் இந்நிறுவனத்தால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. கௌரவம் மிக்க சம்ருத்தி விரைவுச் சாலையின் தொகுப்பு 11-ன் பணிகளை எடுத்து நிறைவேற்றியதன் மூலம் என் எச் 48 நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கி தனது செயலிருப்பை இந்நிறுவனம் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது; திட்ட செயலாக்கத்தில் நேர்த்தி நிலை மீதான பொறுப்புறுதியை இதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது. மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களின் வெற்றிக்கு வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்குவது அத்தியாவசியமானது; இதில் எச் எம் பி எல் - ன் திறன் அதன் வெற்றிகரமான பயணத்தில் வலுவாக வெளிப்பட்டிருக்கிறது. தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக அம்சங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் திறமையான நிர்வாக குழு, நிலையான வளர்ச்சி மற்றும் வெற்றியை நோக்கி இந்நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. ஒப்புக்கொண்ட கால அளவிற்குள் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதிலும், உயர்தரங்களைப் பேணுவதிலும், பாதுகாப்பு கோட்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதிலும் கொண்டிருக்கும் பொறுப்புறுதி மற்றும் அர்ப்பணிப்பு என்ற வலுவான அடித்தளத்தில் எச் எம் பி எல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் ஒவ்வொரு செயல்முயற்சியிலும் இக்கோட்பாடுகளே அதனை வெற்றிகரமாக வழிநடத்தியிருக்கின்றன. எம் எஸ் ஆர் டி சி மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என் எச்ஏ) உட்பட முக்கியமான வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்குவதற்கு வர்த்தக மற்றும் தொழில்நுட்பத் திறன்களின் கூட்டிணைவு சக்தியை எச் எம் பி எல் நன்கு பயன்படுத்தியிருக்கிறது மற்றும் அத்தகைய வாடிக்கையாளர்களுடன் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருக்கிறது. நம் நாட்டின் நெடுஞ்சாலை கட்டுமான செயல்திட்ட தளத்தில் அதிகளவு திருப்தியடைந்த வாடிக்கையாளர் அடித்தளத்தை வலுவாக கட்டமைப்பதை வெறும் நான்கு ஆண்டுகளுக்குள் எச் எம் பி எல் சாதித்திருக்கிறது.

## தென்மேற்குப் பருவமழை காலத்தில் நாடு முழுவதும் இயல்பை விட அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக புவி அறிவியல் அமைச்சக செயலாளர் தெரிவித்துள்ளார்

சென்னை, 16 ஏப்ரல் 2024: 2024 ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்குப் பருவமழையின் போது நாடு முழுவதும் இயல்பை விட அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று புவி அறிவியல் அமைச்சக செயலாளர் டாக்டர் எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் இன்று செய்தியாளர் கூட்டத்தில் பேசிய அவர் 2024 தென்மேற்குப் பருவமழை குறித்து விளக்கமளித்தார். நீண்டகால சராசரியில் 106% ஆக இருக்கும் என்றும், இது 5% கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். 1971-2020 தரவுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் பருவகால மழையின் நீண்டகால சராசரி 87 செ.மீ.

இந்த முன்னறிவிப்பு இயக்கவியல் மற்றும் புள்ளிவிவர மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், வடமேற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகளைத் தவிர நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட அதிக மழை பெய்யக்கூடும் என்றும் டாக்டர் ரவிச்சந்திரன் கூறினார். வடக்கு அரைக்கோளத்தில் இயல்பை விட குறைவான பனி உறைவு, 2024 தென்மேற்குப் பருவமழை காலத்தில் மழைக்கு சாதகமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் (ஜனவரி முதல் மார்ச் 2024 வரை) வடக்கு அரைக்கோளத்தில் பனிப்பொழிவு இயல்பை விட குறைவாக இருந்தது, இது இந்தப் பருவமழை காலத்தில் அதிக மழைப்பொழிவைக் குறிக்கிறது என்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர் மொஹபத்ரா தெரிவித்தார். வடக்கு அரைக்கோளம் மற்றும் யூரேசியா முழுவதும் குளிர்கால மற்றும் வசந்த கால பனி பரப்பளவு பொதுவாக அடுத்தடுத்த பருவ மழையுடன் தலைகீழ் தொடர்பைக் கொண்டுள்ளது. 2024 மே கடைசி வாரத்தில் பருவ மழைக்கான புதுப்பிக்கப்பட்ட கணிப்புகளை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிடும் என்று அவர் கூறினார்.

மேற்கண்ட கணிப்புகளின் தொடர்ச்சியாக, முறையே ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அடுத்தடுத்து வரும் ஒரு மாதத்திற்கான மாதாந்திர மழை முன்னறிவிப்பு வெளியிடப்படுகிறது. கூடுதலாக, நாடு முழுவதற்குமான மழை அளவு முன்னறிவிப்புகளும், பருவத்தின் இரண்டாம் பாதியில் (ஆகஸ்ட்-செப்டம்பர்) மழைப்பொழிவின் அளவும் ஆகஸ்ட் மாத முன்னறிவிப்புடன் ஜூலை மாத இறுதியில் வெளியிடப்படுகின்றன.

2024, மே கடைசி வாரத்தில் பருவ மழைக்கான புதுப்பிக்கப்பட்ட கணிப்புகளை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிடும்.

## ஓட்டேரி பகுதியில் தண்ணீர் பிடிப்பதில் ஏற்பட்ட தகராறில் முதியவரை சுத்தியலால் தாக்கிய பெண் கைது

சென்னை, 16 ஏப்ரல் 2024: சென்னை, பட்டாளம், பென்சனர்ஸ் லேன் பகுதியில் வசித்து வரும் விஜயகுமார், வ/65, த/பெ.பக்தவச்சலம் என்பவர் நேற்று (14.04.2024) காலை மேற்படி தனது வீட்டின் அருகில் உள்ள தெருக்குழாயில் தண்ணீர் பிடிக்க சென்றபோது, குழாய் சரியாக வேலை செய்யாததால், சுத்தியலை எடுத்துக் கொண்டு குழாயை சரி செய்து கொண்டு இருந்தபோது, அங்கு வந்த அதே பகுதியில் வசித்து வரும் சசிகலா, பெ/வ-37 என்பவர் மேற்படி விஜயகுமாரிடம் தண்ணீர் பிடிப்பது குறித்து வீண் தகராறு செய்துள்ளார். தகராறு முற்றிய நிலையில், சசிகலா சுத்தியலை கொண்டு விஜயகுமாரின் தலையில் தாக்கியுள்ளார். இதில் இரத்தகாயம் ஏற்பட்ட விஜயகுமார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, பி-2 ஓட்டேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பி-2 ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட சசிகலா, பெ/வ-37, க/பெ.எத்திராஜ், பென்சனர்ஸ் லேன், பட்டாளம், சென்னை என்பவரை கைது செய்தனர். மேலும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 சுத்தியல் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் கைது செய்யப்பட்ட சசிகலா மீது ஏற்கனவே பி-2 ஓட்டேரி காவல் நிலையத்தில் 1 அடிதடி வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட சசிகலா விசாரணைக்குப் பின்னர், நேற்று (14.04.2024) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## இந்தியப் பொருளாதாரப் பணிப் பயிற்சி அதிகாரிகள் குடியரசுத்தலைவரை சந்தித்தனர்

சென்னை, 16 ஏப்ரல் 2024: இந்தியப் பொருளாதாரப் பணிப் பயிற்சி (ஐ.இ.எஸ்) அதிகாரிகள் குழுவினர் (2022 மற்றும் 2023 தொகுப்புகள்) இன்று (ஏப்ரல் 16, 2024) குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவைக் குடியரசுத்தலைவர் மாளிகையில் சந்தித்தனர்.

அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய குடியரசுத்தலைவர், நாட்டின் வளர்ச்சியில் பொருளாதார மேம்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்றார். பேரியல் மற்றும் நுண் பொருளாதாரக் குறியீடுகள் முன்னேற்றத்தின் பயனுள்ள அளவீடுகளாகக் கருதப்படுகின்றன. எனவே, அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் பயனுள்ளவையாக மாற்றுவதில் பொருளாதார வல்லுநர்களின் பங்கு முக்கியமானதாகும். உலகின் 3-வது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி இந்தியா முன்னேறி வருவதால், அவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்தவும், அவற்றை முழுமையாகப் பயன்படுத்தவும் வரும் காலங்களில் எண்ணற்ற வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்று அவர் அதிகாரிகளிடம் கூறினார். இந்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு அவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

2022 மற்றும் 2023 தொகுப்புகளில் இடம் பெற்றுள்ள ஐ.இ.எஸ் அதிகாரிகளில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண் அதிகாரிகள் என்பதைக் குறிப்பிட்டு குடியரசுத்தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார். பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது இந்தியாவின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தீர்மானத்தை நிறைவேற்ற உதவும் என்று அவர் கூறினார். பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பெண் அதிகாரிகள் பாடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கொள்கை தொடர்பான ஆலோசனைகளை வழங்கும்போது அல்லது பணியிடத்தில் எந்தவொரு முடிவையும் எடுக்கும்போது, நாட்டில் உள்ள ஏழை மற்றும் பின்தங்கிய பிரிவினரின் நலனை இளம் அதிகாரிகள் மனதில் கொள்ள வேண்டும் என்பதைக் குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார்.

## இராமாபுரம் பகுதியிலுள்ள வீட்டில் சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் பதுக்கி வைத்திருந்த நபர் கைது. 230 மதுபாட்டில்கள் மற்றும் 1 ஆட்டோ பறிமுதல்

சென்னை, 16 ஏப்ரல் 2024: சென்னையில் போதை பொருட்கள் மற்றும் மதுபாட்டில்களை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களை கண்டறிந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., அவர்கள் உத்தரவிட்டதின்பேரில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தங்களது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீவிரமாக கண்காணித்து சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, ஆர்-11 இராமாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் நேற்று (15.04.2024) மதியம், இராமாபுரம், கங்கையம்மன் கோயில் தெருவிலுள்ள ஒரு வீட்டை ரகசியமாக கண்காணித்தபோது, அங்கு சட்டவிரோதமாக விற்பனைக்காக மதுபாட்டில்கள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் சட்டவிரோதமாக மது பாட்டில்கள் பதுக்கி வைத்திருந்த பிரதாப், வ/38, த/பெ.துரைராஜ், கங்கையம்மன் கோயில் தெரு, இராமாபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்த 180 மி.லி. அளவு கொண்ட 230 மதுபாட்டில்கள் மற்றும் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 ஆட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி பிரதாப் விசாரணைக்குப் பின்னர் நேற்று (15.04.2024) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.